සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## வரலாறு - ඉතිහාසය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.

1. வரலாற்றைக் கற்பதற்குப் பயன்படும் பழைய நூல்களும் பரம்பரைக்கதைகளும் .................................. மூலாதாரமாகக் கருதப்படும். (இலக்கிய, தொல்பொருள், கல்வெட்டு)

2. கி.பி. 12ம் நூற்றாண்டில் மகா பராக்கிரமபாகுவினால் நிர்மாணிக்கப்பட்ட ...................................................... தொல்பொருள் மூலாதாரமாகும்.
(ஆயிரம் கால் மண்டபம், பொலன்னறுவை கல்விகாரை, சீகிரியா)

3. மகிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்தது கிறிஸ்து பிறப்பதற்கு 250 ஆண்டுகளுக்கு முன்பாகும். அக்காலம் ............................................... எனப்படும்.
(கிறிஸ்து வருடம், புத்த வருடம், கிறிஸ்துக்கு முன்)

4. வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறுபெறுமதிமிக்க செயற்பாடுகள் செய்த அனைவரினதும் நெருங்கிய உறவினர், ..............................................ஆவர்.
(ஹோமோ ஹெபிலஸ், ஹோமோ சேபியன், ஹோமோ இரெக்டஸ்)

5. உலகில் தோன்றிய மிகப்பழமை வாய்ந்த நாகரிகம் ............................................... நதிக்கரையில் தோன்றிய மொசப்பத்தேமியா நாகரிகமாகும். (நைல், குவாங்கோ, யூப்பிரடீஸ்)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் (✓) அடையாளத்தையும் பிழையாயின் (×) அடையாளத்தையும் இடுக.

6. இன்றைக்கு பத்து இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் புவியில் முதலில் தோன்றிய உயிரினம் புரோக்காயோட் பக்டீரியாவாகும் (   )

7. சீனா, இந்தியா, மத்திய மெக்சிகோ போன்ற நாடுகளுள் உலகில் முதன் முதலில் நெல்லுற்பத்தியை மேற்கொண்ட நாடு இந்தியாவாகும். (   )

8. இலை குழைகளையும் தடிகளையும் பயன்படுத்தி தற்காலிக குடிசைகள் அமைத்து வாழ்ந்தவர்கள் இடைக்கற்கால மனிதர்கள் ஆவர். (   )

9. சிந்து நதி நாகரிகத்தில் வாழ்ந்த கில்கமேஷ் என்பவரால் ஆப்பு வடிவ எழுத்துக்களால் எழுதப்பட்ட வீரக்கதையானது உலகில் மிகப்பழைமை வாய்ந்த இலக்கிய நூலாகும். (   )

10. புராதன கால மனிதன் களிமண்ணைக்கொண்டு செய்யப்பட்ட அரிவாள் ஒன்று இஸ்ரவேலில் கண்டுபிடிக்கப்பட்டது. (   )

♦ 11 - 15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

11. புராதன நாகரிகங்களின் மூலம் உலகிற்கு பல்வேறு கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்து நதி நாகரிகத்தின் மூலம் கிடைத்த கொடை யாது?
1) நகரத்திட்டம் 2) கணிதமுறை 3) கட்டடம் 4) சித்திர எழுத்துக்கள்

12. நெருப்பைக் கண்டு பிடித்து மனிதன் முதன் முதலில் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கிடைக்கப்பெற்ற இடம் எது?
1) சீனா 2) இஸ்ரவேல் 3) எகிப்து 4) இந்தியா

13. இலக்கிய மூலாதாரமான மகாவம்சத்தின் நூலாசிரியர் யார்?
1) புத்தகோச தேரர் 2) ஸ்ரீ ராகுல தேரர்
3) ஸ்ரீ சுமங்கலதேரர் 4) மகாநாம தேரர்

14. பூமிக்கு அதிபதியான கடவுள் என்கிகி என்பவர் எந்நாகரிகத்தைச் சேர்ந்தவர் ஆவார்?
1) சீனா 2) எகிப்து 3) மெசாப்பதேமியா 4) சிந்து நதி

15. சிற்பியைத் துளைத்துச் செய்யப்பட்ட கழுத்தில் அணியும் அட்டியல் கண்டு பிடிக்கப்பட்ட குகை எது?
1) கிதுல்கல 2) பாகியங்கல 3) படதொம்பலேன 4) மானியங்கம

♦ 16 - 20 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிகளில் பொருத்தமான விடையை எழுதி பூரணப்படுத்துக.

16. மகாவம்சத்தில் குறிப்பிட்டபடி, விஜயன் உள்ளிட்ட குழுவினர் தமது குடியேற்றங்களை இலங்கையில் ......................................... ஓயா நதிக்கரைக்கு அண்மையில் அமைத்துக்கொண்டனர்.

17. ஆபிரிக்காக் கண்டத்தில் உருவான எகிப்திய நாகரிகத்தில் நீண்டகாலம் ஆட்சி செய்த அரச பரம்பரை ....................................................... எனப்படும்.

18. வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த மொசப்பத்தேமியா மக்கள் ஆறுகளில் பொருட்களை எடுத்துச் செல்ல ...................................................... பயன்படுத்தினர்.

19. இன்றைக்கு பத்து இலட்சத்து ஐந்நூற்றி நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவில் கண்டு பிடிக்கப்பட்ட உயிரினமொன்றின் படிவு .............................................. எனப்படும்.


20. பெரிய மிருகங்களின் எலும்புகளைக் கொண்டு வீடுகள் அமைத்து, காய்கறிகளை உணவாகக்கொண்டு வாழ்ந்த மனித வர்க்கத்தினர் ....................................... திறமைமிக்க வேடர்களாகத்திகழ்ந்தனர்.

(2 X 20 = புள்ளிகள்)

**பகுதி** II


- முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

*1.*




i) மேலேயுள்ள மாதிரி உலகப்படத்தில் A, B, C எனும் எழுத்துக்களால் புராதன நதிக்கரையோர நாகரிகங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குமுறையில் தருக.
   1) A  2) B  3) C
   *(3 புள்ளி)*


ii) இந்நாகரிகங்கள் இடம்பெற்ற நதிகளை ஒழுங்குமுறையில் எழுதுக.
   1) A  2) B  3) C
   *(3 புள்ளி)*



iii) அ) இவ்வுருவில் காணப்படுவது மொசப்பத்தேமிய நாகரிகத்தில் காணப்பட்ட சமயக் கட்டடம் ஆகும். இதனைப் பெயரிடுக. *(1 புள்ளி)*
   ஆ) இக்கட்டடம் அமைந்துள்ள நகரம் யாது? *(1 புள்ளி)*
   இ) மொசப்பத்தேமிய மக்களின் கடவுள் குழுவின் தலைவனாகக் கருதிய கடவுள் யார்? *(1 புள்ளி)*
   ஈ) மொசப்பத்தேமிய மக்கள் காற்றுக்கும் விவசாயத்திற்கும் அதிபதியாகக் கருதப்பட்ட தெய்வத்தின் பெயர் என்ன? *(1 புள்ளி)*



iv) அ) இவ்வுருவில் காட்டப்பட்டிருக்கும் நபர் யார்? *(1 புள்ளி)*
   ஆ) இவர் உயர் நிலையிலிருந்த ஒருவர் என்பதனை எடுத்துக்காட்டும் அடையாளம் என்ன? *(1 புள்ளி)*
   இ) இவ்வுருவில் கண் சற்று மூடியிருப்பதானது எதனை எடுத்துக்காட்டுகிறது?



v) அ) இவ்வுருவில் காட்டப்பட்டிருக்கும் கட்டடம் யாது? *(1 புள்ளி)*
   ஆ) இக்கட்டடம் எங்கு அமைந்துள்ளது? *(1 புள்ளி)*
   இ) இவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தினுள் எந்த மன்னர்களினதும் மனைவிமார்களினதும் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன? *(1 புள்ளி)*


2. i) உமது பாடசாலையில் வரலாற்றினைக் கற்பதற்கு பயன்படும் மூலாதாரங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)



ii) A. இவ்வுருவில் காட்டப்பட்டிருப்பது யாது?
B. இதனை அமைக்கப் பயன்படுத்திய பொருட்கள் 2 தருக.
C. இது எக்காலத்துக்குரியது? (4 புள்ளி)

iii) வானரங்கள் மனிதனது நிலையை அடைவதற்கு முன்னோக்கிச் சென்ற 5 சந்தர்ப்பங்களையும் குறிப்பிடும் பெயர்களை ஒழுங்குமுறையாகத் தருக. (5 புள்ளி)

3. i) A. இவ்வுருவில் காட்டப்பட்டிருக்கும் நிர்மாணம் யாது?
B. இதனை அமைத்த மன்னன் யார்?
C. இந் நிர்மாணத்தின் வடிவம் யாது?
D. இதனுள்ளே வைக்கப்பட்டிருப்பது யாது?
(4 புள்ளி)



ii) A. வெள்ளரச மரக்கிளை இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட துறைமுகம் யாது? (2 புள்ளி)

B. பின்வரும் தகவல்களை சரியான முறையில் இணைக்க.

| | |
|---|---|
| 1. முடிசூட்டுப் பொருட்கள் பெற்றுக்கொடுத்தல் | A. சங்கமித்தை |
| 2. பௌத்த மதம் கொண்டுவரப்படல் | B. தேவநம்பிய திஸ்ஸ மன்னன் |
| 3. மூட்ட சிவ மன்னனுக்குப் பிறகு ஆட்சிபீடம் ஏறல் | C. அனுலா தேவி |
| 4. வெள்ளரச மரக்கிளை எடுத்து வரப்படல் | D. மகிந்த தேரர் |
| 5. பிக்குணி சாசனம் ஆரம்பிக்கப்படல் | E. அசோக மன்னன் |
| | F. வசப மன்னன் |

(5 புள்ளி)

4. மனிதனது முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்தும் மிக முக்கிய சந்தர்ப்பங்களாக நாகரிகங்கள் தோற்றம் பெற்றமையை எடுத்துக் கூறலாம்.

i) மொசப்பத்தேமிய சமூகத்தின் நான்கு பிரிவுகளும் எவை? (4 புள்ளி)

ii) பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு உரிய விடையை கீழ் தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

| | A | B |
|---|---|---|
| 1. | நாகரிகங்கள் ஆட்சி செய்யப்படல் | .................................... |
| 2. | மன்னர்களின் சடலங்கள் வைக்கப்படல் | .................................... |
| 3. | மிகப்புராதன எழுத்துத் தொகுதி | .................................... |
| 4. | உலகில் மிகப் பழைய சட்டக்கோவை | .................................... |
| 5. | உருவங்களைப் பயன்படுத்தி உருவாக்கிய எழுத்துக்கள் | .................................... |
| 6. | இறந்த உடலை நீண்ட காலம் பேணிப்பாதுகாத்தல் | .................................... |
| 7. | கழுதை மீது பொருட்கள் ஏற்றிச் செல்லல் | .................................... |

(ஆப்பு எழுத்து, தவளம், பாராவோ, மம்மி, பிரமிட்டு, ஹமுராபி சட்டம், சித்திர எழுத்துக்கள், சிகுராத்) (7 புள்ளி)

5. i) பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை முன்னேற்றுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கு தருக. (4 புள்ளி)

ii) பண்டுகாபய மன்னனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகள் 4 தருக. (4 புள்ளி)

iii) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை எழுதுக.
அ) பண்டுகாபய மன்னனின் ஆட்சிப்பிரதேசம்

ஆ) இக்காலத்தில் கொல்லர்கள் வழிபட்ட தெய்வத்தின் பெயர் யாது?(3 புள்ளி)

6. i) முதன்முதலில் இந்நாட்டில் குடியேறியவர்கள் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய கல்லாயுதங்களைத் தவிர வேறு இரு பொருட்களைத் தருக. (2 புள்ளி)

ii) விஜயன் இந்நாட்டுக்கு வந்த சமயம் இந்நாட்டு மக்களிடம் முன்னேற்றமடைந்திருந்த தொழிநுட்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) விஜயன் உள்ளிட்ட குழுவினருடன் வந்த அமைச்சர்கள் மூவர் பின்வருமாறு ABC எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் அமைத்துக்கொண்ட குடியிருப்புக்களை ஒழுங்கு முறையாகத் தருக.

A. உபதிஸ்ஸ B. அநுராத C. தீகாயு (3 புள்ளி)

iv) புரான கால மக்கள் இறந்தவர்களுக்காக நடத்திய மரணச்சடங்கு முறைகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

7. i) தேவநம்பிய திஸ்ஸ மன்னன், மகிந்த தேரர் உட்பட குழுவினருக்கு காணிக்கையாக வழங்கிய பூங்காவையும் விகாரையையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) தேவநம்பிய திஸ்ஸ மன்னனால் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் பின்வருமாறு. இவற்றுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்க.

கல்விக்குத் தேவையான பிரிவெனாக்களைக் கட்டிய பிரதேசம் ....................

அநுராதபுர நகர எல்லையைத் தீர்மானிக்க பயன்படுத்திய இரண்டு யானைகளின் பெயர்கள் .................................................... ..................................................

மகிந்த தேரர் உட்பட குழுவினருக்கு வசிப்பதற்கு தானமாக வழங்கிய குகை ................................ (2 புள்ளி)

(மகாபதும, செங்கல், குஞ்ச, மகாமேகவனம், மகாவிகாரை, அட்டசெட்டலென்)


iii) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துக.

*இடமிருந்து வலம்*

1) இலங்கைக்கு பௌத்தமதம் கொண்டு வந்தவர்
2) பண்டுகாபய மன்னனின் மனைவி
3) எகிப்திலுள்ள, அதிசயங்களில் ஒன்று
4) மகிந்த தேரருடன் வந்த தேரர் ஒருவர்

*மேலிருந்து கீழ்*

5) தேவ நம்பிய திஸ்ஸ மன்னன் பிக்குமார்களுக்கு தானம் வழங்கும் பொருட்டு கட்டப்பட்ட தானசாலை
6) முதன் முதலாக பௌத்த மதத்தைத் தழுவிய மன்னன்
7) முதன்முதலில் மனிதன் உணவு தேடிய விதம் (7 புள்ளி)




Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page